**செய்தி வெளியீடு எண்: 01/2023** **நாள்: 02.01.2023**

**<u>சென்னை மெட்ரோ இரயில் சேவை தொடங்கப்பட்ட ஏழு ஆண்டுகளில் இதுவரை எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு 2022-ம் ஆண்டில் மட்டும் 6.09 கோடி பேர் மெட்ரோ இரயிலில் பயணித்துள்ளார்கள்</u>**

**<u>சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தகவல்</u>**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தனது மெட்ரோ இரயில் சேவையை கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் 29 முதல் சென்னையில் துவங்கியது. இதுவரை சென்னையில் உள்ள மக்களுக்கும், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கும் சென்னை மெட்ரோ இரயில் ஒரு நம்பகமான பாதுகாப்பான போக்குவரத்து வசதியை செய்து வருகிறது.

மெட்ரோ இரயில் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. தற்பொழுது சென்னை மெட்ரோ இரயிலில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 2.20 லட்சம் முதல் 2.30 லட்சம் வரை பயணிகள் பயணிக்கின்றனர். சென்னை மெட்ரோ இரயில் சேவை தொடங்கப்பட்ட ஏழு ஆண்டுகளில் இதுவரை இல்லாத அளவிற்கு 2022-ம் ஆண்டில் மட்டும் 6.09 கோடி பேர் மெட்ரோ இரயிலில் பயணித்துள்ளார்கள் என்றும் 2021-ம் அண்டை விட 2022-ம் ஆண்டில் 3.56 கோடி பயணிகள் அதிகமாக பயணித்துள்ளார்கள் என்று சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளதாவது;**

சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் துவங்கியதிலிருந்து நாளுக்கு நாள் பயணிகளின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது. கடந்த 2015 முதல் 2018 வரை 2,80,52,357 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

கடந்த 2019-ம் ஆண்டில் 3,28,13,628 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணித்துள்ளார்கள்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொது முடக்கத்தினால் சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. இந்நிலையில் கடந்த 2020-ம் ஆண்டு மட்டும் 1,18,56,982 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று காலம் என்பதால் கடந்த 2021-ம் ஆண்டு மே மாதம் முதல் ஜூன் மாதம் வரை மெட்ரோ இரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. இந்நிலையில் கடந்த 2021-ம் ஆண்டு

மட்டும் 2,53,03,383 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த 2022-ம் ஆண்டில் 6,09,8,7,765 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணித்துள்ளார்கள்.

இதுவரை சென்னை மெட்ரோ இரயிலில் கடந்த ஏழு ஆண்டுகளில் அதாவது, 2015-ம் ஆண்டு முதல் 2022-ம் ஆண்டு வரை 15,88,08,208 கோடி பயணிகள் பயணித்துள்ளார்கள்.

மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**